எம்.சி.ஓ.பி எண்: 577 /2023 தேதி: 04.06.2026

எ,மசா. : 1

பெயர் : கரண்

த/பெ. : தங்கப்பாண்டியன்

வயது : 24

**சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் எ,மசாஆ 1,2 மட்டும் தாக்கல் செய்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்தவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றாலும் அது விபத்தின் போது காணாமல் போய்விட்டதால் அவருடைய மகன் இறந்தவருக்கு தவறுதலாக ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொல்லிவிட்டார் என்றால் சரியல்ல. அதன் காரணமாக ஓட்டுநர் உரிமத்தை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கொடுக்கமுடியவில்லை என்றால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஓட்டுநர் உரிமம் கொடுக்கப்படவில்லை என்பதால் செக் ரிப்போட் வழங்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகன ஆய்வாளர் சரியாக விசாரிக்காமல் செக் ரிப்போர்ட் வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. இறந்த நபர் 15 ஆண்டுகளாக நல்ல முறையில் வாகனத்தை ஓட்டிவந்தார் என்றாலும் சாலையின் ஓரமாக சென்றவர் மீது டிராக்டர் டிப்பர் வந்து மோதிவிட்டது என்றால் சரியல்ல. டிராக்டர் டிப்பர் அதிவேகமாகவும், அஜாக்கிருதையாகவும் கவனக்குறைவாகவும் வந்து விபத்து ஏற்பட்டுள்ளதால் 2 வது எதிர்மனுதாரர்தான் இழப்பீடு தரவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

1 வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.